**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

**எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.**

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 035/ந/2021
நாள். 09.03.2022

திரு. ச.இராமசுந்தரமணி,
அம்பாசமுத்திரம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்
அம்பாசமுத்திரம் நகராட்சி – எதிர்மனுதாரர்

தென்காசி மாவட்டம், அம்பாசமுத்திரம் நகராட்சியில் உதவியாளர் மற்றும் கணக்கராக பணியாற்றும் திரு.ச.இராமசுந்தரமணி என்பவரின் 16.04.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.04.2021 அன்று பெறப்பட்டு 35/ந/2021 என்ற முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தென்காசி மாவட்டம், அம்பாசமுத்திரம் நகராட்சியில் உதவியாளர் மற்றும் கணக்கராக பணியாற்றும் திரு.ச.இராமசுந்தரமணி என்பவர் தன்னுடைய மனுவில் கீழ்காணுமாறு புகார் தெரிவித்துள்ளார்:–

> "22.04.2020 நாளிட்ட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு சமர்பித்த விண்ணப்பத்தில் 09.04.2020 பணியேற்பு அறிக்கை சமர்ப்பித்த என்னை பணியேற்க அனுமதிக்காமல் துறைத் தலைவரின் உத்தரவுக்கு கீழ்படியாமலும் சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையின் அசல் வழக்கு எண். WP.(M.D)No.1522/2020, 24.02.2020–ஆம் நாளிட்ட தீர்பாணையை மதிக்காமலும் 01.04.2020 முதல் 28.04.2020 வரை நகராட்சியில் நடைபெற்றுள்ள பணிகளுக்கான செலவினப் பட்டியல்களில் விதிமுறைகளை மீறியும் நடைமுறைகளை பின்பற்றாமலும் உரிய பதிவேடுகள்

பராமரிப்பு செய்யாமலும் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களின் அறிக்கைகள் இல்லாமலும் ஆணையாளர் (பொ) அம்பாசமுத்திரம் நகராட்சி அவர்களால் ஒப்புதளிக்கப்பட்ட செலவினப்பட்டியல்களுக்கு என்னை பொறுப்பாக்க இயலாது எனத் தெரிவித்தும் ஈப்பு வாகனத்தை தனது சொந்தப் பயன்பாட்டிற்காக திரு.வே.ஜின்னா ஆணையாளர் (பொ) அவர்கள் அம்பாசமுத்திரம் நகராட்சியில் ஆணையாளராக பொறுப்பேற்றுக் கொண்ட நாளான **26.11.2019** முதல் நாளது தேதிவரை தன்னை செங்கோட்டையிலிருந்து காலையில் அழைத்துவரவும் மாலையில் தன்னை வீட்டில் கொண்டு போய் விடுவதற்கும் ஈப்பு வாகனத்தை தவறாக தன் சுயலாபத்திற்காக பயன்படுத்தியும் ஈப்பு வாகன லாக்புக்கில் தவறான பதிவுகளை பதிவு செய்தும், அம்பாசமுத்திரம் நகராட்சிக்கு மிகப்பெரிய அளவில் நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளார் எனவும், மேலும் வருவாய் பிரிவில் அ1 பணியிடத்தில் **26.11.2020** முதல் நாளது தேதிவரை நூற்றுக்கணக்கான வரிவிதிப்பு செய்யக்கோரிய விண்ணப்பங்கள் மீது வரிவிதிப்பு செய்யாமலும் மிகப்பெரிய அளவில் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது எனவும், எனது புகார் மனுவை **23.04.2020**ல் பெற்றுக் கொண்ட ஆணையாளர் (பொ) அம்பாசமுத்திரம் நகராட்சி அவர்கள் என்னை கடந்த **07.04.2020** முதல் பணியேற்க அனுமதித்ததாக திருமதி.காயத்ரி தேவி இளநிலை உதவியாளர், கணினியில் **23.04.2020**ல் செயல்முறை ஆணையின் எண்.**434/2020** சி1 நாள்.**07.04.2020** என தட்டச்சு செய்து வழங்கினார்கள். அதன் நகல் தங்களின் மேலான பார்வைக்கு இத்துடன் சமர்ப்பித்துள்ளேன். மீளவும் **28.04.2020** என்னை வருவாய் ஆய்வாளர் (பொ) மற்றும் மேலாளர் (பொ) பணியிடங்களுக்கான பொறுப்புக்களையும் கவனித்து வரும்படி ஆணையாளர் (பொ) அம்பாசமுத்திரம் நகராட்சி அவர்கள் **434/20** சி1 நாள் **28.04.2020**ன்படி செயல்முறை ஆணையை வழங்கினார்கள் அதன் நகலையும் தங்களின் மேலான பார்வைக்கு இத்துடன் சமர்ப்பித்துள்ளேன். எனது புகாருடன் ரூ.93,96,673/–க்கு முறையான கோப்புகளின்றியும் முறையான பதிவேடுகளின்றியும் முறையான அலுவலர்களின் தேவைப்பட்டியல் பெறாமலேயும் முறையான அலுவலர்களின் செலவினப்பட்டியல் ஒப்புதலளிக்க பரிந்துரை செய்யப்படாமலேயும் திரு.வே.ஜின்னா ஆணையாளர் (பொ) அவர்கள் நகராட்சி நிதியை முறைகேடாக பயன்படுத்தியுள்ளார் எனவும் தெரிவித்திருந்தேன்.

**29.04.2020** நாளிட்ட பணியேற்பு அறிக்கையின்படி Revene fund காசோலை புத்தகம், water supply Fund காசோலை புத்தகம், Capital Fund காசோலை புத்தகம், NULM Fund காசோலை புத்தகம், அம்மா உணவகம் காசோலை புத்தகம், Fund Transfer காசோலை புத்தகம் மற்றும் மேற்கண்ட

Payment book ஐ வழங்கினார்கள். ஆனால் இந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் வரை மேற்படி 2019–20–ம் ஆண்டிற்கான தணிக்கைக்கு உட்படுத்தப்படவேண்டிய செலவினப்பட்டியல்கள் மற்றும் 01.04.2020 முதல் 28.04.2020 நாளிட்ட வரையிலான செலவினப்பட்டியல்கள் மற்றும் மேற்கண்ட காசோலைக்குரிய வங்கிக் கணக்குகளின் பாஸ்புத்தகங்களையோ மற்றும் வங்கியில் பெறப்பட்ட ஸ்க்ரால் எதுவும் என்னிடத்தில் ஒப்படைப்பு செய்யப்படவில்லை என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

18.05.2020 நாளிட்ட எனது விண்ணபத்தில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.4524/2020/ஜே1, நாள்.09.03.2020ன்படி அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையாளர் (பொ) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.355/2020/சி1 நாள் 11/03/2020ன் படி இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர் திரு. முத்து என்பவரை களப்பணி உதவியாளராக பதவி உயர்வு அளித்து, மேற்படி களப்பணி உதவியாளர் பணியிடம் நிரப்பப்பட்டதால் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து பணியிட புதுப்பித்தல் (post sanction renewal) அனுமதி பெறாத நிலையில் 30.04.2020 வரை துப்புரவு பணியாளர் பணியிடத்தில் ஊதியம் பெற்றுவந்த திரு.முத்து என்பவரை 11.03.2020 முதல் பதவி உயர்வு அளித்தாக முன்னுக்குபின் முரணாக உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பதவி உயர்வு உத்தரவானது 12.05.2020 வரை வெளிஅலுவலர்கள் வருகைக் பதிவேட்டை ஆய்வு செய்து ஆய்வுக் குறிப்பில் இடம் பெறாத திரு.முத்து களப்பணி உதவியாளர் திடீரென்று 13.05.2020 வெளி அலுவலர்கள் வருகைப்பதிவேட்டை ஆய்வு செய்யும் போது 11.03.2020 முதல் தன்னிச்சையாக வருகைபதிவேட்டில் தன்பெயரை எழுதி கையொப்பமிட்டுள்ளார். 12.05.2020 அன்றுதான் திரு.முத்து என்பவருக்கு மேற்படி பதவி உயர்வுக்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதற்கு வெளிபணியாளர்கள் வருகை பதிவேட்டினை ஆய்வு செய்தால் தெரியவரும். மேலும் திரு.முத்து என்பவரை தனக்கு சாதகமாக செயல்பட வைத்து பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவைப்படும் உபகரணங்கள், கிருமி நாசினி மருந்துகள் மற்றும் தேவைப்படும் பொருட்களை வாங்க திரு.முத்து என்பவரிடமே தேவைப்பட்டியல் பெற்று முறைகேடான வழிகளில் நிதியிழப்பு ஏற்பட செய்துள்ளார். பொது சுகாதாரம் குறித்தான எவ்வித பயிற்சியும் பெறாத திரு.முத்து களப்பணி உதவியாளர் என்பவரிடம் முறைகேடாக அறிக்கைகள் பெற்று நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் 29.04.2020 நாளிட்ட எனது விண்ணப்பம் குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் சென்னை உயர்நீதிமன்றம்

மதுரை கிளையின் அசல் வழக்கு எண். WP.(M.D)No.6526/2020 நாள்.28.05.2020ம் தீர்ப்புரையின்படியும் 03.06.2020 அன்று அம்பாசமுத்திரம் நகராட்சியில் திருமதி.சுப்புலட்சுமி நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் (பொ) அவர்களும் திரு.மாகதேவன் கண்காணிப்பாளர் அவர்களும் திரு.கண்ணன், கணக்கர் (ம) மேலாளர் (பொ) செங்கோட்டை நகராட்சி அவர்களும் திரு.செ.ராஜ் இளநிலை உதவியாளர் இ1 எழுத்தர் செங்கோட்டை நகராட்சி அவர்களும், அம்பாசமுத்திரம் நகராட்சியில் களஆய்வு மேற்கொண்டதில் 01.04.2020 முதல் 28.04.2020 வரையுள்ள செலவினப்பட்டியல் மட்டுமே ஆய்வு மேற்கொண்டு ஆய்வின் போது துப்புரவு ஆய்வாளர் திரு.சிதம்பர ராமலிங்கம் என்பவரை பொது சுகாதாரப் பிரிவு சம்பந்தமாக வாங்கப்பட்ட பொருட்களின் தேவைப்பட்டியலில் கையெழுத்து போட்டுத் தருமாறு கோரியுள்ளார். ஆனால் திரு.சிதம்பர ராமலிங்கம், துப்புரவு ஆய்வாளர் அவர்கள் மேற்படி பொது சுகாதாரப் பொருட்களின் தேவைப்பட்டியல், இருப்பு பட்டியல் மற்றும் செலவினப்பட்டியல் இவற்றில் எதிலும் கையெழுத்து போட மறுத்துவிட்ட நிலையில் ஆய்வு செய்யப்பட்ட ஆவணங்களின் ஜெராக்ஸ் நகல்கள் திரு.வே.ஜின்னா ஆணையாளர் (பொ) அவர்களை காப்பாற்றும் எண்ணத்தில் எடுத்துக் செல்லப்பட்டுள்ளது. ஆனால் எனது பணியேற்பு கோப்பு திரு.முத்து, களப்பணி உதவியாளர் பதவி உயர்வு கோப்பு, ஈப்பு வாகன லாக்புக், வருகைப்பதிவேடு, உள்மற்றும் வெளி அலுவலர் வருகைபதிவேடு, பொது சுகாதார பிரிவு 03/2020 மற்றும் 04/2020 மாத ஊதியப்பட்டியல்கள், குடிநீர் வழங்கல் பிரிவில் ரூ.20,000/– மதிப்பீட்டிற்குமேல் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் கோரப்படாமல் விலைப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டும் செலவினப்பட்டியல்கள் ஒப்புதலளிக்கப்பட்டு வவுச்சர்கள் எதனையும், மற்றும் அ1 பிரிவில் வரிவிதிப்புக்காக நிலுவையிலுள்ள நூற்றுக்கணக்கான கோப்புகள் எதுவும் ஜெராக்ஸ் எடுக்கப்படாமல் ஆய்வுக் குழுவினர் சென்றுள்ளனர். இது ஆய்வுக்குழுவினரின் மீதான நம்பகத் தன்மையை களங்கப்படுத்துவதுடன், இதில் இருந்து என்ன தெரியவருகிறது என்றால் ஆய்வுக்குழு ஒரு கண்துடைப்பாக மிகவும் மேம்போக்காக ஆய்வு செய்யப்படுவதாக தெரியவருகிறது.

எனவே ஆணையாளர் திரு.வே.ஜின்னா அவர்கள் பணியேற்ற நாளான 26.11.2019 முதல் நாளது தேதிவரையிலுமான, மேலே என்னால் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து விதமான கோப்புகள், செலவினப் பட்டியல்கள், பதிவேடுகள், மன்ற தீர்மானப்புத்தகம் ஆகியவற்றை ஜெராக்ஸ் நகல் எடுத்து ஆவணப்பதிவு செய்து மேல்நடவடிக்கை தொடர சம்பந்தப்பட்ட

ஆய்வுக்குழுவிற்கு உத்தரவிடும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பான அறிக்கையை அனுப்பி வைக்குமாறு 22.06.2021 நாளிட்ட அறிக்கை வாயிலாக அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) தமது அறிக்கையில்

''சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கின் (வழக்கு எண். WP.(M.D)No.6256 நாள்.28.05.2020) தீர்ப்பாணையில் மனுதாரரிடமிருந்து புதியதாக கோரிக்கை மனுவினை பெற்று அதன்மீது நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் விசாரணை நடத்தி அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது கண்டறியப்பட்டால் நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) மற்றும் தவறான புகார் அளித்த மனுதாரர் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு ஆணையிடப்பட்டுள்ளதை, புதியதாக 15.06.2020 நாளிட்ட புகார் மனுவினை திரு.ச.இராமசுந்தரமணி, உதவியாளர் (ம) கணக்கர் பொறுப்பு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பித்துள்ளதை தொடர்ந்து 15.07.2020ல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு எனது தற்காப்பு முகாந்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

திரு.ச.இராமசுந்தரமணி உதவியாளர் (ம) கணக்கரால் தெரிவித்த புகார்கள் அனைத்தும் நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) திரு.வே.ஜின்னா அளித்த அறிக்கையினையும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் ஆய்வு செய்ததில் மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள பதிவேடுகளை கூர்ந்தாய்வு செய்ததிலும், முறைகேடுகளோ மற்றும் விதிமீறல்களோ நடைபெற்றதாக கருத வழிவகை இல்லை என்று விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் திரு.ச.இராமசுந்தரமணி உதவியாளர் (ம) கணக்கர் பொறுப்பு தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பினை உணர்ந்து அலுவலகத்தில் பணியாற்றுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு நகராட்சி பணியாளர்கள் நன்னடத்தை விதிகள் 1979 மற்றும் நகராட்சி அலுவலக நடைமுறை விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள பொறுப்புகளை சரிவர நிறைவேற்றாமலும், அடிப்படை, கடமை, நம்பகத் தன்மை, எதிர்பாக்கப்படும் நேர்மையான நன்னடத்தை மற்றும் கடமையில் ஈடுபாடு இல்லாமல் தவறான நடத்தை மற்றும் நெறி தவறிய நடவடிக்கைகள் மேற்கொண்டதால் திரு.ச.இராமசுந்தரமணி உதவியாளர் (ம) கணக்கர் பொறுப்பு பணியாற்றிய பரமக்குடி – 1, கடையநல்லூர் – 2, மற்றும் குழித்துறை – 3 நகராட்சிகளில் பணியிடை நீக்கம்

செய்யப்பட்டு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வுகள் நிறுத்தப்பட்ட கடுமையான தண்டனைகள் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நேர்வுகளில் தவறான அடிப்படை ஆதாரமற்ற கற்பனை கலந்த உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுகளை நகராட்சி நிர்வாகத்தின் மீது சுமத்தி நகராட்சி நிர்வாகத்திற்கு பொதுமக்கள் மத்தியில் அவதூறு பரப்பிய நடவடிக்கையில் ஈடுபட்ட திரு.ச.இராமசுந்தரமணி உதவியாளர் (ம) கணக்கர் பொறுப்பு மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கின் தீர்ப்பாணையில் தெரிவித்துள்ளபடி உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உரிய ஆணை பிறப்பிக்குமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

3) மேலும் அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையர் தமது 16.07.2021 நாளிட்ட அறிக்கையில்

''அம்பாசமுத்திரம் நகராட்சியில் முன்னாள் ஆணையாளராக பொறுப்பு வகித்த திரு.வே.ஜின்னா என்பவர் 01.042020 முதல் 26.04.2020 வரை உள்ள காலங்களில் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாகவும், நிதியிழப்பு ஏற்பட காரணமாக இருந்தது குறித்து, இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் திரு.ச.இராமசுந்தரமணி, உதவியாளர் மற்றும் கணக்கரால் அனுப்பப்பட்ட புகார் மனுவிற்கு கடந்த 15.07.2020ல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு தற்காப்பு முகாந்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை WP.(M.D)No.6256/28.03.2020 நம்பராக மேற்கண்ட கணக்கர் தொடரப்பட்ட வழக்கின் உத்தரவிற்கு ஏற்ப இரு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்கு தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் கோப்புகள் சூர்ந்தாய்வு செய்யப்பட்டத்தில், முறைகேடுகளோ விதி மீறல்களோ நடைபெற்றதாக கருத வழிவகை இல்லை என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் 28.07.2020 தேதிய விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 16.07.2021 நாளிட்ட அரசு வழக்கறிஞரின் சட்டக்கருத்துருவும் இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

4) கூடுதல் அரசு வழக்கறிஞர் தமது 16.07.2021 நாளிட்ட சட்டக் கருத்தில்:-

''நான் மேற்கண்ட கோப்புகளிலுள்ள ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் அம்பாசமுத்திரம் நகராட்சியில் பணிபுரியும் திரு.ச.இராமசுந்தரமணி என்பவர் அம்பாசமுத்திரம் ஆணையாளர் (பொ) ஆக பணிபுரிந்த திரு.ஜின்னா என்பவர் மீது 01.04.2020 முதல் 28.04.2020 வரை

நகராட்சியில் நடைபெற்றுள்ள பணிகளுக்கான செலவின பட்டிலில்களில் விதிமுறைகளை மீறியும், நடைமுறைகளைப் பின்பற்றாமல் இருந்ததாகவும் கூறி சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் WP.(M.D)No.**6256/2020** என்ற வழக்கினை தாக்கல் செய்தார். மேற்படி வழக்கு முழுவிசாரணைக்குப் பின் மனுதாரரான திரு.ச.இராமசுந்தரமணி மேற்படி வழக்கின் **3**வது எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ள திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களிடம் **15.06.2020**க்கு முன்பு அணுகி புகார் அளிக்கும்படியும், மேற்படி புகாரின் அடிப்படையில் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் மனுவின் இரு தரப்பினர்களையும், அழைத்து தங்களது தரப்பு விளக்கத்தை அளிக்க உரிய வாய்ப்பளித்து விசாரணை நடத்தும்படியும், மேற்படி விசாரணையில் இரு தரப்பினரில் யாரேனும் தவறு செய்திருப்பதாக தெரியவந்தால் மேற்படி தவறின் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் பரிந்துரை செய்து **28.05.2020** தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி உயர்நீதிமன்ற உத்தரவின்படி திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அவர்கள் விசாரணை நடத்தி கூர்ந்தாய்வு செய்து யாதொரு தவறும் நடைபெறவில்லை என அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உள்ளாட்சி மன்ற குறைதீர்ப்பாயத்தில் மனுதாரர் திரு.ச.இராமசுந்தரமணி கொடுத்த அதே புகார் மனு கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. ஏற்கனவே மேற்படி புகாரின் மீது சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை WP.(M.D)No.**6256/2020** என்ற வழக்கில் முழு விசாரணை செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதனடிப்படையில் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அவர்கள் விசாரணை நடத்தி அறிக்கையும் சமர்ப்பித்து தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும், மேற்படி உயர்நீதிமன்ற வழக்கின் விசாரணையின் போது எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏற்கனவே மேற்படி திரு.ச.இராமசுந்தரமணியின் மேற்படி புகார் மனு விசாரணைக்காக உள்ளாட்சி மன்றம் குறைதீர்ப்பாளர் தீர்ப்பாயம் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக உயர்நீதிமன்றத்தில் தெரியப்படுத்தியுள்ளது. எனவே, தற்பொழுது அந்த மனு தான் உள்ளாட்சி மன்றம் குறைதீர்ப்பாளர் தீர்ப்பாயம் அலுவலகத்திலும் விசாரணைக்கு வந்துள்ளது.

ஆகையால் மேற்படி சங்கதிகளை பரிசீலனை செய்து உள்ளாட்சி மன்றம் குறைதீர்பாளர் தீர்ப்பாய விசாரணையிலும் ஆஜராகி ஏற்கனவே மேற்படி மனு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை WP.(M.D)No.**6256/2020** வழக்கில் பிறந்த உத்தரவையும், அதனடிப்படையில் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் நடத்திய விசாரணை

அறிக்கையையும் சமர்ப்பித்து விளக்கம் தாக்கல் செய்ய பரிந்துரை செய்யப்படுகிறது'' என்று தெரிவித்துள்ளார்.

5) அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையாளர் தமது **02.09.2021** நாளிட்ட அறிக்கையில்

''திரு.ச.இராமசுந்தரமணி மேற்படி புகாரின் மீது உரிய விசாரணை நடத்தக்கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WP.(M.D)No.**6256/2020** என்ற நீதிப்பேராணை (writ) மனுவினை தாக்கல் செய்தார். மேற்படி உயர்நீதிமன்ற ரிட் மனுவில் முழு விசாரணைக்குப் பின், திரு.ச.இராமசுந்தரமணி மேற்படி ரிட் மனுவில் சேர்க்கப்பட்டுள்ள திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் **15.06.2020**க்கு முன்பு இருதரப்பினர்களும் அணுகி புகார் அளிக்கும்படியும், மேற்படி புகாரின் அடிப்படையில் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மனுவின் இரு தரப்பினர்களையும் அழைத்து தங்களது தரப்பு விளக்கத்தை அளிக்க உரிய வாய்ப்பளித்து விசாரணை நடத்தும்படியும், மேற்படி விசாரணையில் இரு தரப்பினரில் யாரேனும் தவறு செய்திருப்பதாக தெரியவந்தால் மேற்படி தவறின் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் பரிந்துரை செய்து **28.05.2020** தேதியில் மாண்புமிகு நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி உயர்நீதிமன்ற உத்தரவின்படி திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அவர்கள் இருதரப்பினர்களிடமிருந்தும் பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்கு தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் கோப்புகள் தாக்கல் செய்யப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் முறைகேடுகளோ, விதிமீறல்களோ நடைபெற்றதாக கருத வழிவகை இல்லை என்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் **28.07.2020** தேதியில் விசாரணை அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி விசாரணையின் போது மேற்படி புகார் சம்பந்தமான அனைத்து ஆவணங்களும் தாக்கல் செய்யப்பட்டு, அதனடிப்படையிலேயே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் திரு.ச.இராமசுந்தரமணி புகார் மனுவின் மீது உரிய சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு விசாரணை நடத்தி அதனடிப்படையில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

எனவே, ஏற்கனவே சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் WP.(M.D)No.**6256/2020** என்ற நீதிப்பேராணை (writ) மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் விசாரணை செய்து திரு.ச.இராமசுந்தரமணி கூறியுள்ள புகாரில் யாதொரு விதிமீறல்களோ, முறைகேடுகளோ இல்லை என தீர்வு

காணப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என்று தெரிவித்துள்ளார்.

6) இந்நேர்வில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 01.03.2022 அன்று திருநெல்வேலி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

மனுதாரர் 01.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:–

"அம்பாசமுத்திரம் நகராட்சியில் உதவியாளர் மற்றும் கணக்கராகப் பணியாற்றும் நான் மேற்கண்ட நகராட்சியில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்து, அத்தீர்ப்பில் ஆணையரின் மீது விசாரணை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டது. அதன்பேரில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மூலம் ஆணையரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் விசாரணை குறித்த நகல் எனக்கு வழங்கப்படவில்லை.

கோவிட் 19 பெருந்தொற்றின் போது திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையை, கொரானாவை ஒழிப்பதாகக் கணக்கு காட்டி பெருந்தொகையை ஊழல் செய்துள்ளனர். உதாரணமாக மாஸ்க் வாங்கியதில் பெரும் ஊழல். ஒரு மாஸ்க் ரூபாய் 630/–க்கு வாங்கியதாக கணக்கு காட்டியுள்ளனர். சுகாதார ஆய்வரிடம் Requirement Statement வாங்காமல் கொள்முதல் செய்துள்ளனர்.

நான் மேலாளராக பொறுப்பில் இல்லாத காலத்தில், எனது ID ஐ பயன்படுத்தி எனக்குத் தெரியாமல் பல்வேறு பில்களுக்கான தொகை செட்டில் செய்யப்பட்டுள்ளது.

காலாவதியான பணியிடத்தை பதவியை எவ்வித அனுமதியும் பெறாமலும் Renewal பண்ணாமல் மேற்கண்ட பதவிகளை பதவி உயர்வு மூலம் நிரப்பியுள்ளனர்.

மேற்கண்ட அனைத்திற்கும் நகராட்சி ஆணையராக பொறுப்பு வகித்த திரு.ஜின்னா என்பவர்தான் பொறுப்பாவார். மேற்கண்ட திரு.ஜின்னா நகராட்சிக்கு சொந்தமான ஜீப்பினை பயன்படுத்தி தனது சொந்த பயணங்களுக்கு உபயோகப்படுத்தியுள்ளார். எனவே, மேற்கண்ட திரு.ஜின்னா என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்நிகழ்வு தொடர்பாக எனது 08.06.2020 நாளிட்ட மனுவினையே மேல் விளக்கமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

7) 01.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையாளர் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:–

"மனுதாரர் திரு.ச.இராமசுந்தரமணி தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் எனக்கு முன்னர் பணியாற்றிய ஆணையரைப் பற்றியதாகும். நீதிமன்ற உத்தரவின்படி மனுதாரரின் புகார் மனுவின் மீது நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அவ்விசாரணை அறிக்கையில் முறைகேடுகளோ விதிமுறை மீறலோ நடைபெற்றதாக கருத வழிவகைவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கை நகலினை இம்முறைமன்றத்தில் சமர்பிக்கிறேன். மேலும், விசாரணை செய்யப்பட்டதன் நகலினை மனுதாரருக்கு கொடுக்கப்பட்டதா என்கின்ற விவரம் எனக்கு தெரியவில்லை என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

8) இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் மனு அவரது வாக்குமூலம் அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) அவர்களின் அறிக்கை மற்றும் தற்போதைய ஆணையர் அவர்களின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திரு.ச.இராமசுந்தரமணி மேற்படி புகாரின் மீது உரிய விசாரணை நடத்தக்கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WP.(M.D)No.6256/2020 என்ற நீதிப்பேராணை மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி உயர்நீதிமன்ற ரிட் மனுவில் முழு விசாரணைக்குப் பின், திரு.ச.இராமசுந்தரமணி மேற்படி ரிட் மனுவில் புகாரின் அடிப்படையில் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மனுவின் இரு தரப்பினரையும் அழைத்து அவர்களது விளக்கத்தை அளிக்க உரிய வாய்ப்பளித்து விசாரணை நடத்தும்படியும், மேற்படி விசாரணையில் இரு தரப்பினரில் யாரேனும் தவறு செய்திருப்பதாக தெரியவந்தால் மேற்படி தவறின் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் பரிந்துரை செய்து 28.05.2020 தேதியில் மாண்புமிகு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேற்படி உயர்நீதிமன்ற உத்தரவின்படி திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அவர்கள் இருதரப்பினர்களிடமிருந்தும் பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்கு தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் கோப்புகள் தாக்கல் செய்யப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் முறைகேடுகளோ, விதிமீறல்களோ நடைபெற்றதாக கருத வழிவகை இல்லை என்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் 28.07.2020 தேதியில் விசாரணை அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

மேலும் **16.07.2021** நாளிட்ட கூடுதல் அரசு வழக்கறிஞரின் சட்டக்கருத்துருவிலும் அது உறுதி செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தமது வாக்குமூலத்தில் கோவிட் **19** பொருந்தொற்றின் போது திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையை அப்பணிக்கு செலவழிக்காமல் ஊழல் செய்துள்ளனர் என்றும் மாஸ்க் வாங்கியதில் ஒரு மாஸ்க் ரூ.**630**/–க்கு வாங்கியதாக கணக்குகாட்டியதாகவும் தெரிவித்துள்ளார். இதற்கான ஆதார ஆவணம் எதையும் சமர்பிக்கவில்லை. மேலும் தான் மேலாளராக பொறுப்பில் இல்லாத காரணத்தால் தனது ID ஐ பயன்படுத்தி பல்வேறு பில்களுக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது என மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றசாட்டுகள் அனைத்திற்கும் நீதிமன்ற ஆணையின்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதில் விதிமீறல்களோ முறைகேடுகளோ நடைபெற்றதாக கருத வழிவகையில்லை என்று அறிக்கை சமர்பிக்கப்பட்ட நிலையில் அதே குற்றசாட்டுகளுக்கு மற்றொரு விசாரணை நடத்த வேண்டிய அவசியம் எழவில்லை என்பதால் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரால் விசாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையை உறுதி செய்து இம்மனுமீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்க இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் விசாரணையின் அறிக்கையின் நகல் தனக்கு கிடைக்கவில்லை என்று மனுதாரர் தெரிவித்திருப்பதால் அந்த அறிக்கையின் நகல் ஒன்றினை மனுதாரருக்கு அனுப்பி வைக்கும்படி அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

The RDMA's enquiry report copy could have been given to the petitioner as he is entitled to claim one even in the capacity of petitioner who went before the Hon'ble High Court on the issue. Even otherwise he could claim under RTI. This omission is mysterious on the part of the Ambasamudram Municipality as well as the RDMA.

The petitioner has made specific allegations of pecuniary nature tantamount to gross misuse of Government funds. The allegations are serious. A facial mask has been purchased for a pricey amount of Rs.630/- per piece according to the petitioner. Hence, it is fair and just that the Local Fund Audit Director is directed to order a thorough audit of the quotations, vouchers, bills, payments, expenditures incurred during the period by the Municipal Commissioner against whom the charges have been levelled. This exercise may be undertaken expeditiously. On receipt of the Audit Report of the Director of Local Fund Audit, the Director of Municipal Administration is instructed to pursue further action in accordance with rules and regulations. If grave misconduct in fiscal management and misuse of Government funds are reported, the DMA shall initiate appropriate disciplinary action against all the delinquents involved in the violations.

The Audit should cover all financial transactions conducted during the tenure of the Municipal Commissioner against whom complaints of misuse have been levelled by the Accountant of the Local Body. The entire exercise should be completed within 3 months.

2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.ச.இராமசுந்தரமணி,
அம்பாசமுத்திரம்,
தென்காசி மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
அம்பாசமுத்திரம் நகராட்சி,
தென்காசி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை,
நெ.571, அண்ணாசாலை, நந்தனம், சென்னை 600 035.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

10/3/22
செயலாளர்